செய்திவெளியீடு **நாள் : 13.12.2025**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் வருகின்ற 2026 ஜனவரி மாத இறுதிக்குள் தண்டையார்பேட்டை நவீன பேருந்து நிலையம் மற்றும் புதுவண்ணாரப்பேட்டை, வ.உ.சி. நகர் ஒருங்கிணைந்த விளையாட்டு மையம் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல் .

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (13.12.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் தண்டையார்பேட்டை நவீன பேருந்து நிலையத்தின் முன்னேற்றப் பணிகளையும், புதுவண்ணாரப்பேட்டை, வ.உ.சி. நகரில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த விளையாட்டு மையத்தின் (Tondiarpet Integrated Sports Centre) முன்னேற்றப் பணிகளையும், துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பணிகளையும், இராயபுரம் சட்டமன்றத் தொகுதி, மூலகொத்தளத்தில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடத்தின் கட்டுமான பணிகளையும் மற்றும் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, அண்ணா பிள்ளை தெருவில் கட்டப்பட்டு வரும்"**ஒருங்கிணைந்த வளாகத்திலுள்ள**" புதிய சமுதாய நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் மற்றும் விளையாட்டுத் திடலின் கட்டுமான பணிகளை துரிதபடுத்தும் வகையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளில், ஒரு முக்கியப் பிரிவாக தண்டையார்பேட்டை பேருந்து நிலையத்தை புதிதாக வடிவமைக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் 2026 ஜனவரி மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படவுள்ளதாக, மாண்புமிகு திராவிட ஆட்சியின் நாயகன், **எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்கள்** அறிவித்துள்ளார்.

இதன் திட்ட மதிப்பு ரூபாய் 20 கோடி. இந்த தண்டையார்பேட்டை பேருந்து நிலையம், போக்குவரத்து துறை துவங்கப்பட்டபோது முதன்முதலாக தொடங்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பணிமுனையாகும். அந்த வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பணிமுனை, எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆட்சி காலத்தில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

இதனுடன் இணைந்து, ஆர்.கே. நகர் பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு வீரர்கள் அதிக அளவில் உருவான பகுதியாகும். கேரம், பாக்சிங், கபடி என அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் இங்கிருந்துதான் உருவாகின. அந்த விளையாட்டு வீரர்களுக்காக, நம்முடைய விளையாட்டுத் துறை அமைச்சர் மற்றும் **மாண்புமிகு துணை முதலமைச்சராக** உள்ள **திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின்** ஆட்சி, விளையாட்டுத் துறையின் பொற்காலம் என்றால் மிகையாகாது. அந்த வகையில், சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் தற்போது ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில், டேபிள் டென்னிஸ் மற்றும் சிலம்பம் மைதானம், குத்துச்சண்டை அரங்கம், கூடைப்பந்து விளையாட்டு அரங்கம், உடற்பயிற்சி கூடம், பிசியோதெரபி அறை, பல்நோக்கு விளையாட்டு வசதிகள், கழிப்பிட வசதி, குடிநீர் வசதிகள் ஆகியவை அமைக்கப்பட உள்ளன.

Verified Press Release Store ™

இதனுடன், சட்டப்பேரவை உறுப்பினர் திரு.எபினேசர் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு இணங்க, ஒரு கேரம் அரங்கமும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகளும் 2026 ஜனவரி மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கொண்டு இந்தப் பணிகள் முடிக்கப்படுமா என்ற கேள்விக்கு – மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில்.

நிச்சயமாக, திராவிட மாடல் ஆட்சியில் சொன்னதை செய்வோம்; செய்வதைத்தான் சொல்லுவோம். இந்தப் பணிகள் தேர்தல் அறிக்கையில் இடம்பெறாதவை. பல்வேறு இடர்பாடுகள், இயற்கை சீற்றங்கள் போன்றவற்றுக்கிடையிலும், இந்தப் பணிகளை குறித்த காலத்தில் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான், துறையின் அமைச்சராக நான் ஒருமுறை ஆய்வுக்கு வருகிறேன். அதேபோல், எங்கள் துறையின் செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா அவர்கள் ஒருமுறை ஆய்வுக்கு வருகிறார்கள். துறையின் உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.பிரகாஷ் அவர்கள் வருகிறார்கள். மேலும், சென்னை மாநகரப் பணிகள் என்பதால், மாநகராட்சியின் ஆணையாளர் திரு.குமரகுருபரன் அவர்கள், மாநகர மேயர், அதேபோல் ஆர்.டி.சி. திரு.ரவி உள்ளிட்டோர் அனைவரும் ஒருங்கிணைந்து ஒத்துழைத்து, இந்தப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு குறித்த காலத்திற்குள் கொண்டு வர தேவையான அழுத்தத்தை தொடர்ந்து வழங்கி வருகின்றோம். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின்போது ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜே.எபினேசர், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐட்ரீம்ஸ் மூர்த்தி, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மாநகராட்சி நகரமைப்பு குழுத்தலைவர் திரு.இளைய அருணா, மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.நேதாஜி யூ.கணேசன், திரு.பி.ஸ்ரீராமுலு, சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு, எம்டிசி இணை மேலாண் இயக்குநர் திரு.சௌந்தரபாண்டியன், பொது மேலாளர் (இயக்கம்) திரு.நெடுஞ்செழியன், மாமன்ற உறுப்பினர்கள் திரு.தாஹா நவீன், திருமதி.பவித்ரா நரேந்திரன், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.முரளி, திரு.ராஜசேகர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RedEstore™